**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 160** **நாள் : 16.10.2018**

**வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் குறித்து வருவாய்த் துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது**

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் 15.10.2018 அன்று வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் காவல் ஆணையாளர் (தெற்கு) (சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு.மகேஷ்குமார் அகர்வால், இ.கா.ப., ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் உத்தரவின்படி, ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களுடன் சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த அலுவலர்களுடன் விரிவான ஆய்வுப்பணி குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இவ்வாய்வுக்கூட்டத்தில் அனைத்து மண்டலங்களிலும் விடுபட்ட மழைநீர் வடிகால் பணிகள் 80 சதவீதம் போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளும் விரைந்து முடித்திட அறிவுறுத்தப்பட்டது.

பருவமழைக்காலங்களில் அனைத்து துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து உடனுக்குடன் பணிகள் மேற்கொள்ளவும், அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் வெள்ளத்தடுப்பு மண்டல கண்காணிப்பு அலுவலர்களிடமும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் மற்றும் துணை ஆணையாளர்களிடம் தகவல் தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 200 வரையுள்ள வார்டுகளில் உள்ள திறந்தவெளி கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய், கழிவுநீர் கால்வாய்களில் அடைப்பு ஏற்படாமல் தடுத்திட அனைத்து கால்வாய்களிலும் தூர்வாரும் பணி நிறைவு பெற்றுள்ளது. மழைநீர் வடிகால்களில் அடைப்பு ஏற்படாமல் தடுத்திட 200 வார்டுகளிலும் பணியாளர்கள் விடுப்பு எடுக்காமல் வெள்ளப்பணிகள் மேற்கொள்ள தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவ்வப்பொழுது, வெள்ளத்தடுப்பு மண்டல கண்காணிப்பாளர்கள் ஆய்வின்போது தெரிவிக்கப்படும் அனைத்து பணிகளையும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும், பருவமழையை எதிர்கொள்ள அனைத்து நிலைகளிலும் பெருநகர சென்னை மாநகராட்சி தயார்நிலையில் உள்ளது என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களுக்கும் வெள்ளத்தடுப்பு பணிக்காக நியமிக்கப்பட்ட இந்திய ஆட்சிப் பணி நிலை கண்காணிப்பு அலுவலர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வடிகால் துறை, மின்சார வாரியம், போக்குவரத்து காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**